# காணிக்கை தர வந்தோம்

காணிக்கை தர வந்தோம்
உன் மலரடி பாதங்கள் வணங்க வந்தோம்
வரங்களை புரியும் நாயகனே - எம்
கரங்களை குவித்து வணங்கி வந்தோம்
உன் மலரடி பணிந்து வாழ்வினைத் தருவோம்

( காணிக்கை)

**1**

இயற்கையின் எழிலினிலே உனக்கு எம்
சந்தன மலர்களை எடுத்து வந்தோம்
தீபங்கள் ஏந்தி உன் திருமுன் ஏற்ற
மேடை வருகின்றோம்
உனக்கென ஆயிரம் கீதங்கள் பாடி
எம்மைத் தருகின்றோம்

( காணிக்கை )

**2**

கோதுமை கதிர் மணி போல்
இணைந்து - எம்
வாழ்வினை காணிக்கையாக்க வந்தோம்
நாவினால் உந்தன் புகழினைப் பாட
மேடை வருகின்றோம்
வாழ்வினில் ஆயிரம் தேவைகள் ஆற்ற
எம்மையே தருகின்றோம் - நாம்

( காணிக்கை)